**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : சரவணகுமார்**

**தேதி : 04.03.2026 நேரம் : மாலை 6.10 மணி**

---------------------------------------------------------------------------------------------

***தலைப்புச் செய்திகள்***

ஹோலி பண்டிகையை முன்னிட்டு குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பின்லாந்து அதிபர் திரு. அலெக்சாண்டர் ஸ்டுப், அரசுமுறை பயணமாக இன்று காலை புதுடெல்லி வந்தடைந்தார்.

மியான்மர் உடனான இந்தியாவின் நல்லுறவு, மக்களை மையமாக கொண்டது என்று மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

புதுச்சேரி அரசு, டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் யாத்திரை திட்டத்தை அறிமுகப்படுத்தி இருப்பது, மகிழ்ச்சி அளிப்பதாக துணை நிலை ஆளுநர், திரு. கைலாஷ்நாதன் பாராட்டு தெரிவித்தார்.

------------------------------

*ஹோலி பண்டிகை 1* (3)

ஹோலிப் பண்டிகை இன்று வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப் படுகிறது. இந்நாளையொட்டி, தலைவர்கள் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். இதுகுறித்த ஒரு செய்தி தொகுப்பு.....

(வாய்ஸ்)

*ஹோலி பண்டிகை* 2 (17)

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், வண்ணங்களின் திருவிழா, மக்களின் வாழ்வில் அன்பையும், நம்பிக்கையையும் கொண்டு வந்து, ஒற்றுமையையும், சகோதரத்துவத்தையும் வலுப்படுத்துவதாக தெரிவித்துள்ளார். *குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி.ராதாகிருஷ்ணன், சமூக ஊடகப் பதிவில் வெளியிட்டுள்ள வாழ்த்து*

செய்தியில், இந்த திருவிழா தீமையை அழித்து, நன்மையின் வெற்றியை கொண்டாடும் விதமாகவும், வசந்த காலத்தை வரவேற்கும் ஒரு விழாவாகவும், ஹோலி பண்டிகை திகழ்கிறது என்று கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், ஹோலிப் பண்டிகை, நாடு முழுவதும் உள்ள மக்க்ளின் வாழ்க்கை, ஒற்றுமை, நல்லிணக்கம், மகிழ்ச்சி, செழிப்பு, மற்றும் வெற்றியின் வண்ணங்களால் நிறையட்டும் என்று அவர் தமது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மக்களவைத் தலைவர் திரு. ஓம். பிர்லா, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், தகவல் -ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், தகவல் - ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் உள்ளிட்ட பலரும், மக்களுக்கு ஹோலி பண்டிகை வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

*ஹோலி பண்டிகை* 3 (9)

ஹோலிப் பண்டிகையை முன்னிட்டு, டெல்லி துணை நிலை ஆளுநர் திரு. வினய்குமார் சக்சேனா, முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா ஆகியோரும் நாட்டு மக்களுக்கு தங்களின் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

ஆஸ்திரேலிய பிரதமர் திரு. அந்தோணி அல்பானீஸ் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், இந்து மற்றும் தெற்காசிய பாரம்பரியத்தைச் சேர்ந்த ஆஸ்திரேலிய மக்களுக்கு, ஹோலி பண்டிகை வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். வண்ணங்களால் கொண்டாடப்படும் இந்த ஹோலிப் பண்டிகை மக்களிடையே ஒற்றுமையை வளர்த்து, நல்ல சமூகங்களை உருவாக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

-----------------------------

*பின்லாந்து* (15)

பின்லாந்து அதிபர் திரு. அலெக்சாண்டர் ஸ்டுப், அரசுமுறை பயணமாக இன்று காலை புதுடெல்லி வந்தடைந்தார். அவரை வெளியுறவுத் துறை இணையமைச்சர் கீரத்திவர்தன் சிங், விமான நிலையத்தில் பாரம்பரிய முறைப்படி வரவேற்றார். ரெய்சினா உரையாடல் 2026-ன் தலைமை விருந்தினராகவும், முக்கிய பேச்சாளராகவும், திரு. அலெக்சாண்டர் ஸ்டுப் பங்கேற்க உள்ளார். புதுடெல்லி வந்தடைந்த பின்லாந்து அதிபரை வரவேற்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில். திரு. அலெக்சாண்டரின் பயணம், இரு நாடுகளுக்கும் இடையே உள்ள உறவுகளை புதிய உச்சத்திற்கு கொண்டு செல்லும் என்று குறிப்பிட்டுள்ளார். நாளை நடைபெற உள்ள ரெய்சினா உரையாடல்

நிகழ்ச்சியில், பின்லாந்து அதிபரின் உரையை தாம் ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாகவும் பிரதமர் திரு. மோடி கூறினார். பின்லாந்து அதிபர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், தமது இந்த பயணம் பின்லாந்து மற்றும் இந்தியாவிற்கு இடையிலான வர்த்தகத் துறை உள்ளிட்ட துறைகளை மேலும் வலுப்படுத்தும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

-----------------------------

*சி.பி. ராதாகிருஷ்ணன்* (16)

குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், 2 நாள் அரசு முறைப் பயணமாக வரும் 7ஆம் தேதி அகர்தலா செல்கிறார். அங்குள்ள மகாராஜா பீர் பிக்ரம் விமான நிலையத்தில் அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட உள்ளது. வரும் 8ஆம் தேதி காலை, ஆல்பர்ட் எக்கா போர் நினைவுச் சின்னத்தில், குடியரசுத் துணைத் தலைவர் தியாகிகளுக்கு மலரஞ்சலி செலுத்த உள்ளார். தொடர்ந்து உதய்பூர் செல்லும் அவர், அங்குள்ள புகழ்பெற்ற திரிபுர சுந்தரி கோவிலில் வழிபாடு செய்ய உள்ளார். பின்னர் அகர்தலாவில் உள்ள திரிபுரா பல்கலைக்கழகத்தின் 14ஆவது பட்டமளிப்பு விழாவில் பங்கேற்கிறார். மேலும், அகர்தலாவில் உள்ள ஹபானியா சர்வதேச கண்காட்சி மைதானத்திற்கு சென்று, சுய உதவிக் குழுக்குள் அமைத்துள்ள அரங்குகளை ஆய்வு செய்து, அக்குழுக்களை சேர்ந்த பெண் உறுப்பினர்களிடையே கலந்துரையாட உள்ளார். இதற்கிடையே, குடியரசுத் துணைத் தலைவரின் வருகையை முன்னிட்டு, மேற்கு திரிபுரா மாவட்ட ஆட்சியர் டாக்டர் விஷால் குமார் தலைமையில், அகர்தலாவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

-----------------------------

*ஜெய்சங்கர்* (14)

இந்தோ-பசிபிக் உள்ளிட்ட இந்தியாவின் 3 முக்கிய வெளியுறவுக் கொள்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதாக, மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறினார். மியான்மரில், சர்சோபெய்க்மன் இலக்கிய மையக் கட்டிடத்தை திறந்து வைத்து பேசிய அவர், அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை, கிழக்கு நோக்கிய செயல்பாடு மற்றும் மஹா சாகர் ஆகியவற்றின் சங்கமத்தில் மியான்மர் உள்ளது என்று தெரிவித்தார். இந்த மையம் இந்தியா-மியான்மர் உறவுகளின் அடையாளமாகவும், மியான்மரின் பாரம்பரிய மற்றும் நாட்டுப்புற இலக்கியங்களின் மையமாகவும், திகழ்வதாக அவர் கூறினார். இருநாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை எடுத்துரைத்த டாக்டர் ஜெய்சங்கர், மியான்மர் உடனான இந்தியாவின் நல்லுறவு, மக்களை மையமாக கொண்டது என்றும், இருதரப்பு உறவுகளை ஆழப்படுத்துவது,

பிராந்திய வளர்ச்சியை ஊக்குவிப்பது ஆகியவற்றை நோக்கமாக கொண்டு, இருநாடுகளும் செயல்படுவதாக கூறினார்.

-----------------------------

*மாநிலங்களவை தேர்தல் (11)*

தமிழகம், மேற்கு வங்கம், தெலங்கானா உள்ளிட்ட 10 மாநிலங்களில் இருந்து, 37 மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் நாளையுடன் முடிவடைகிறது. வேட்பு மனுக்கள் நாளை மறுநாள் பரிசீலிக்கப்படும் என்றும், மனுக்களை திரும்பப் பெற, வரும் 9ஆம் தேதி கடைசி நாள் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. மாநிலங்களவை உறுப்பினர்களுக்கான தேர்தல் வரும் 16ஆம் தேதி நடைபெறும் என்றும், அன்றைய தினம் மாலை 5 மணிக்கு பிறகு வாக்குகள் எண்ணப்பட உள்ளன. இதனிடையே, மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலுக்கு போட்டியிட உள்ள 9 வேட்பாளர்கள் கொண்ட பட்டியலை பிஜேபி அறிவித்துள்ளது. இத்தேர்தலில், தமிழகத்தில் இருந்து, திமுக சார்பில், 4 இடங்களும், அஇஅதிமுக சார்பில் 2 இடங்களும் நிரப்பப்பட உள்ளன.

-----------------------------

குவைத் (16)

குவைத்தின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு மீறப்படுவதை பிரதமர் திரு. நரேந்திர மோடி கண்டித்துள்ளார். குவைத்தின் பட்டத்து இளவரசர் திரு. ஷேக் சபா அல்-கலீத் அல்-ஹமத் அல்-முபாரக் அல்-சபாவுடன், நேற்று பிரதமர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, பேசினார். இந்த கடினமான நேரத்தில் குவைத் மக்களுடன் இந்தியா துணை நிற்கிறது என்றும், பிராந்திய அமைதி மற்றும் ஸ்திரத் தன்மையை மீட்டெடுப்பதன் அவசியம் குறித்தும் அவர் வலியுறுத்தினார். இதுகுறித்து பிரதமர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், குவைத்தில் உள்ள இந்திய சமூகத்தினரின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதி செய்வதற்கு, குவைத் தலைமை தொடர்ந்து அளித்து வரும் ஆதரவை பாராட்டி உள்ளார்.

கத்தார் அமீர், ஷேக் தமீம் பின் ஹமத் அல்-தானியுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி தொலைபேசி மூலம் உரையாடினார். கத்தாரின் இறையாண்மை, மற்றும், பிராந்திய ஒருமைபாடு மீறப்படுவதை அவர் கடுமையாக கண்டித்தார்.

ஓமன் சுல்தான் ஹைதம் பின் தாரிக்குடனும், பிரதமர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, மேற்காசியாவின் சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்து கருத்துக்களை பரிமாறிக் கொண்டார்.

-----------------------------

*ஈரான்* (13)

மேற்காசியாவில் 5ஆவது நாளாக இன்றும் பதற்றம் தொடர்கிறது. டெஹ்ரானில் உள்ள அணு மையங்கள் மீது, இஸ்ரேல்-அமெரிக்க படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன. ஈரானும், ட்ரோன் மூலமான தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது. இதுவரை ஈரானில் உள்ள 300 ஏவுகணைத் தளங்கள் அழிக்கப் பட்டுள்ளதாக, தெரிவித்துள்ள இஸ்ரேல், லெபனானில் உள்ள ஹிஸ்புல்லாவின் 60 தளங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி உள்ளது. இந்நிலையில், மத்திய கிழக்குநாடுகளில் பதற்றம் தொடர்வதால், துபாயில் இருந்து சிறப்பு விமானம் மூலம், 366 பேர் இன்று சென்னை வந்தடைந்தனர். இதனிடையே வளைகுடா மற்றும் மேற்காசிய நெருக்கடியை கருத்தில் கொண்டு, வெளியுறவு அமைச்சகம் சார்பில், புதுடெல்லியில் இலவச கட்டுப்பாட்டு அறை திறக்கப் பட்டுள்ளது என்றும், காலை 9 மணி முதல், இரவு 9 மணி வரை, பொது மக்கள் இந்த சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும், அறிவிக்கப் பட்டுள்ளது.

-----------------------------

*ஆதிதிராவிடர்-புதுச்சேரி* 1 (4)

புதுச்சேரி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில், டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் யாத்ரா திட்டத்தின் கீழ், அம்பேத்கர் வாழ்ந்த இடங்களை பார்வையிடுவதற்கான குழு, புதுச்சேரியில் இருந்து நேற்று புறப்பட்டது. இதுகுறித்த கூடுதல் தகவல்கள்.....

*ஆதிதிராவிடர்-புதுச்சேரி* 2 (12)

சாளுக்கிய எக்ஸ்பிரஸ் ரயிலில், நேற்று இரவு 9.30 மணிக்கு புறப்பட்ட இந்த யாத்திரையை, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் தொடக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், புதுச்சேரி அரசு, டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் யாத்திரை திட்டத்தை அறிமுகப்படுத்தி இருப்பது, மகிழ்ச்சி அளிப்பதாகவும், அதற்காக அரசை பாராட்டுவதாகவும் தெரிவித்தார். இந்த யாத்திரையில் பங்கேற்கும் ஒவ்வொரு நபருக்கும் தலா 40 ஆயிரம் ரூபாய் செலவு செய்யப்படுகிறது என்றும், இந்த யாத்திரையை முடித்து வந்த பிறகு தங்களின் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளமாறும் அவர் கேட்டுக் கொண்டார். இந்நிகழ்ச்சியில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு. செல்வம், சட்டமன்ற உறுப்பினர் திரு. அனிபால் கென்னடி, ஆதிதிராவிடர் நலத்துறை செயலர் டாக்டர் முத்தம்மா ஆகியோர் உடன் இருந்தனர்.

----------------------------

*ஏனாம் (9)*

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, தமிழகம் மற்றும் புதுச்சேரியின் 4 பிராந்தியத்தைச் சேர்ந்த தேர்தல் அதிகாரிகள், மற்றும் உதவி தேர்தல் அதிகாரிகளுக்கான 2 நாள் சிறப்பு கூட்டம் நேற்று தொடங்கியது. சென்னை மாநகராட்சியில் நடைபெற்ற இந்த பயிற்சி முகாமில், வேட்பு மனுக்களை தாக்கல் செய்தல், தகைமைகள், தகுதி நீக்கம், சின்னம் ஒதுக்கீடு செய்தல், மாவட்ட தேர்தல் மேலாண்மைத் திட்டம் மற்றும் வாக்குப்பதிவு நாள் தயாரிப்பு ஆகியவை குறித்து பயிற்சிகள் அளிக்கப்பட்டதாக ஏனாம் மண்டல நிர்வாகியும், தேர்தல் அதிகாரியுமான திரு. சிவராஜ் மீனா தெரிவித்துள்ளார்.

-----------------------------

*ஜோதிராதித்ய சிந்தியா (15)*

நாட்டில் உள்ள 140 கோடி மக்களுக்கு மட்டுமல்லாமல், உலகிற்கான மின்னணு இணைப்புப் பாலங்களை இந்தியா கட்டமைப்பதாக, மத்திய தொலை தொடர்பு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார். ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா நகரில், உலகளாவிய கைபேசி மாநாட்டின் ஒருபகுதியாக, இந்தியாவின் கண்காட்சி அரங்கினை இன்று தொடக்கி வைத்து பேசிய அவர், மனிதகுலத்திற்கு ஆளுமை வழங்கி, நட்புறவை வலுப்படுத்தி, வளங்களை பகிரும் ஒரே குடும்பம் என்ற தத்துவத்தில், இந்தியாவின் நம்பிக்கை குறித்து எடுத்துரைத்தார். பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையிலான அரசு, தொலை தொடர்புத் துறை ஆராய்ச்சி மேம்பாடுகளில் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளதாக அவர் பெருமிதம் தெரிவித்தார். ஸ்பெயினில் நடைபெறும் கைபேசி கண்காட்சி தளத்தில், 40க்கும் மேற்பட்ட படைப்பாற்றல் திறன் மிக்க இந்தியர்களின் புதிய கண்டுபிடிப்புகள், அதிநவீன தொழில்நுட்பங்களுடன் காட்சிப்படுத்தப் பட்டுள்ளதையும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

-----------------------------

*புவியியல் தினம் (10)*

இந்திய புவியியல் ஆய்வு மையத்தின் 176ஆவது நிறுவன தினம் கொண்டாடப்பட்டது. ஹைதராபாத்தில் நடைபெற்ற விழாவில் உரையாற்றிய கூடுதல் இயக்குநர் ஜெனரலும், தெற்கு மண்டல தலைவருமான திரு. விஜய் வி. முகல், கனிம ஆய்வு மற்றும் புவி அறிவியல் ஆராய்ச்சியில், இந்திய புவியியல் ஆய்வு மையத்தின் சாதனைகளை பாராட்டினார். 19ஆம் நூற்றாண்டின் நிலக்கரி கண்டுபிடிப்பில், அதன்

தோற்றம் முதல், தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளில் அதன் தற்போதைய தலைமை வரை, அமைப்பின் பரிணாம வளர்ச்சியை முன்னாள் இயக்குநர் ஜெனரல் எம். ஸ்ரீதர் எடுத்துரைத்தார். கடல் புவியியல் மற்றும் பொது நன்மை புவி அறிவியலில் தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

------------------------------

கிரிக்கெட் (5)

உலகக் கோப்பை டி-20 கிரிக்கெட் தொடரில், இன்றிரவு 7 மணிக்கு, கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெறும் அரையிறுதி ஆட்டத்தில், தென்னாப்பிரிக்கா-நியூசிலாந்து அணிகள் மோதுகின்றன. நாளை மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற உள்ள 2ஆவது அரையிறுதிப் போட்டியில், இந்தியா-இங்கிலாந்து அணிகள் களம் காண்கின்றன.

------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

ஹோலி பண்டிகையை முன்னிட்டு குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பின்லாந்து அதிபர் திரு. அலெக்சாண்டர் ஸ்டுப், அரசுமுறை பயணமாக இன்று காலை புதுடெல்லி வந்தடைந்தார்.

மியான்மர் உடனான இந்தியாவின் நல்லுறவு, மக்களை மையமாக கொண்டது என்று மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

புதுச்சேரி அரசு, டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் யாத்திரை திட்டத்தை அறிமுகப்படுத்தி இருப்பது, மகிழ்ச்சி அளிப்பதாக துணை நிலை ஆளுநர், திருm. கைலாஷ்நாதன் பாராட்டு தெரிவித்தார்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.**